**STC.NO. 08/2022 PW-1**

நாள் : 06.11.2025

பெயர் : சதீஷ்

த/பெ : அறிவழகன்

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் என்ன படித்துள்ளேன் என்றால் B.E. (Mech) படித்துள்ளேன். நான் என்ன வேலை செய்து வருகிறேன் என்றால் விவசாயம் மற்றும் சுயதொழில் செய்து வருகிறேன். நான் வருமான வரி கட்டுகிறேனா என்றால் இல்லை. எனது அம்மா பெயர் என்ன என்றால் மகாலட்சுமி ஆகும். மகாலட்சுமியின் அண்ணன் பெயர் என்ன என்றால் சீனிவாசன் ஆகும். அவருடன் எனக்கு சுமுகமான பேச்சுவார்த்தை உள்ளதா என்றால் உள்ளது. நான் படித்து முடித்த காலத்திலிருந்தே பணி எதுவும் செய்யவில்லையா என்றால் இல்லை செய்து வந்தேன் தற்போது விவசாயம் செய்து வருகிறேன். எனக்கு எவ்வளவு நிலம் உள்ளது என்றால் 1.60 ஏக்கர் நிலம் உள்ளது. இந்த நிலம் என் அம்மா பெயரில் உள்ளது.

விவசாயத்தில் 4 மாதத்திற்கு ஒரு முறை தான் மகசூல் வரும் என்றால் சரிதான். எவ்வளவு வருமானம் வரும் என்றால் 4 மாதத்திற்கு ஒரு முறை ரூ.1,00,000/- வரும். வருமான வரி சட்டத்தின் கீழ் ரூ.20,000/- மேல் பண பரிவர்தனை செய்ய வேண்டும் என்றால் வங்கி பரிவர்தனை மூலமாகவே செய்ய வேண்டும் என்றால் எனக்கு தெரியாது. எதிரியை எனக்கு எப்படி தெரியும் என்றால் எனது அம்மாவும் எதிரியின் மனைவியும் நண்பர்கள் ஆவார்கள். அப்படி தான் எதிரியை தெரியும்.

இதற்கு முன்பு அம்மாவிடம் எதிரிக்கு கொடுக்கல் வாங்கல் இருந்தது. என்னிடம் இதற்கு முன்பாக பணம் எதுவும் எதிரி பெறவில்லை என்றால் சரிதான். எனது பிரமாண வாக்குமூலத்தில் எதிரி இதற்கு முன்பாக என்னிடம் பணம் வாங்கியுள்ளார் என்று சொல்லியிருந்தால் அது தவறு என்றால் இல்லை அம்மா கூறி இதற்கு முன்பும் நான் பணம் கொடுத்துள்ளேன்.

எதிரிக்கு ரூ.6,50,000/- பணத்தை கொடுத்ததாக கூறுகிறேன் அதை எப்படி எதிரியிடம் கொடுத்தேன் என்றால் ரொக்கமாக தான் கொடுத்தேன். ரூ.6,50,000/- எப்படி ஏற்பாடு செய்தேன் என்றால் எனது பணம், எனது அம்மா, அப்பாவின் பணம் சேர்த்து கொடுத்தேன் எனது வழக்கில் மேற்கூறியவாறு தான் பணத்தை ஏற்பாடு செய்தேன் என்று நான் கூறவில்லை என்றால் சரியல்ல. நான் கூறியுள்ளேன். ரூ.6,50,000/- பணத்தின் டினாமினேசன் என்ன என்றால் ரூ.500 தாள்களாக தான் கொடுத்தேன். பாண்டில் உள்ள எதிரியின் கையெழுத்தும், காசோலையில் உள்ள எதிரியின் கையெழுத்திற்கும் வித்தியாசம் உள்ளது என்றால் இல்லை.

காசோலையை எதிரி எப்போது கொடுத்தார் என்றால் 30.11.2021 ல் கொடுத்தார். அதில் 01.12.2021 என்று தேதி குறிப்பிட்டு கொடுத்தார். 01.12.2021 அன்றே காசோலையை வங்கியில் வசூலுக்காக செலுத்தினேனா என்றால் ஆமாம். 07.12.2021 அன்று போதிய பணம் இல்லை என்று காசோலை திருப்பப்பட்டது. அதன் பிறகு என்ன செய்தேன் என்றால் 27.12.2021 அன்று எதிரிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன். அதனை எதிரி வாங்க மறுத்துவிட்டார்.

காசோலை மோசடி வழக்குகளில் எதிரி வழக்கறிஞர் அறிவிப்பை பெற்ற தேதியிலிருந்து 45 நாட்களுக்குள் வழக்கு பதிவு செய்ய வேண்டும் என்பது எனக்கு தெரியுமா என்றால் இல்லை. ஆனால் நான் வழக்கை 27.12.2021 அன்று நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பிற்கு 23.02.2022 அன்று தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

காலதாமதமாக வழக்கு தாக்கல் செய்திருப்பதால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. எதிரி என்னிடம் எந்த பணமும் பெறவில்லை என்றாலும் அவருக்கும் எனக்கும் நேரடியாக எந்த தொடர்பும் இல்லை என்றாலும் சரியல்ல. எதிரி ஸ்ரீராம் சிட்ஸ்க்கு கொடுக்க வேண்டி எனது மாமா சீனிவாசனிடம் கொடுத்திருந்த காசோலையை தவறாக என்னிடம் கொடுத்து இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனது மாமா சீனிவாசனும், நானும் எதிரியிடமிருந்து பணத்தை பறிக்கும் நோக்குவுடன் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் வழக்கிற்கும் தொடர்பு இல்லை என்றாலும் அவர் எனக்கு எந்த பணமும் அளிக்க தேவையில்லை என்றாலும் சரியல்ல.

Typewritten to my dictation in open Court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by witness to be corrected.

SADASIVAM POORNIMA

District Munsif cum Judicial Magistrate, Ranipet
Digitally signed by SADASIVAM POORNIMA
Date: 2025.11.07 15:01:48 +0530

District Munsif cum Judicial Magistrate,
Ranipet.